## கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை
## கொழும்பு மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் இறுதியிருப்பு கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆயுர்வேத மருந்து இருப்பின் பெறுமதி சந்தைப் பெறுமதியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டமையினால் அந்த இருப்பின் பெறுமதி ரூபா 64,480 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 இற்கு முற்பட்ட ஆண்டுகளின் போது மீளச் செலுத்தப்பட்டிருந்த போதும் வைப்புக் கணக்கில் பதியப்படாத செலுத்துகைகளை சீராக்கும் போது ஆரம்ப மீதியில் காணப்படாத ரூபா 4,591,883 தொகை கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மதிப்பிழந்த காசோலை கணக்கின் மீதியை சீராக்குவதற்காக பிழையான நாட்குறிப்புப் பதிவுகள் இடப்பட்டமையால் ரூபா 341,405 இனால் மதிப்பிழந்த காசோலைக் கணக்கு குறைவாகவும் திரண்ட நிதியக் கணக்கு அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ஆதனவரி பெறுவனவுகளுக்காக வழங்கப்பட்ட கழிவின் பெறுமதி ரூபா 2,864,805 தொகை ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் நடப்பாண்டின் மிகை அதிகரித்தும் திரண்ட நிதியக் கணக்கு குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கில் ஆரம்ப மீதியில் 2016 ஆம் ஆண்டிற்குக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண மீதி மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நடப்பாண்டின் போது 2014 ஆம்

ஆண்டிற்குரியதாகக் கிடைத்த ரூபா 1,083,985 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையினால் திரண்ட நிதியக் கணக்கு மற்றும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கு என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 43,926 தொகையான முற்பணம் அந்த ஆண்டின் போது தீர்க்கப்படாமல் 2017 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டதை கணக்கீடு செய்யும் போது அது நடப்பாண்டின் செலவினமாக குறிப்பிடப்பட்டமையால் ரூபா 43,926 இனால் ஆண்டின் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நடப்பாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60,409 தொகையான கைவிரல் அடையாள இயந்திரம் மூலதனமாக்கப்படாமையினால் அந்த சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன மேற்கூறப்பட்ட பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் போது வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக நட்டஈடு கோரி தொடரப்பட்ட 04 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்பட்டது. அதில் 02 வழக்குகளுக்கான இழப்பீட்டுப் பெறுமதி நிர்ணயிக்கப்படாதிருந்ததுடன் 02 வழக்குகள் தொடர்பாக ரூபா 600,000 இழப்பீடொன்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 07 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் உபயோகப் புத்தகங்கள் / பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 37,764,821 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### பெறவேண்டிய கணக்குகள்

(அ) கொழும்பு அபிவிருத்தி சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 199,477 தொகை 2004 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) 2004 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 207,548 தொகை பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

#### தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 22,354,446 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.3.6 இனங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | - | ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் சகல அசையாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 07 வருடங்களுக்கு முன்பெறப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59 முதல் 66 வரை | - | ஆண்டின் ஆரம்பத்தில் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | 332,000 | 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 332,000 கூட்டுத்தொகையான 12 முற்பணங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 50,000 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை இனங்கண்டு / தீர்க்கப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும், ரீ.பீ இலங்கறத்ன விளையாட்டரங்கை ஒதுக்குவதற்காக 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 50,000 தொகையான 10 வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | - | சபையின் வாகனம் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணையின் பிரதி மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப்பொருள் முகாமைத்துவ விதி 18(1) | - | உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுகின்ற வரிகளுக்கு மேலதிகமாக கழிவுப்பொருட்களை வீட்டுக்கு வீடு சேகரிக்கும் செலவினங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக சபையினால் அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வீடுகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் 1060 இலிருந்து கழிவுப்பொருள் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை இல.15 | 5,608,253 | நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கணக்கில் காணப்படுகின்ற பணத்தை இனங்கண்டு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லலை. |

### 1.3.7 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபையின் ஆரம்பம் முதல் 2010 யூன் 30 ஆந் திகதி வரை காணப்பட்ட அத்திகதியின் பின்னர் மூடப்பட்ட மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் பேரேட்டின் பிரகாரம் காசுக் கணக்கில் ரூபா 47,233 வரவு மீதி காணப்பட்டது. இந்த வங்கிக் கணக்கு 2010 யூலை 09 ஆந் திகதிய மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக அங்கீகாரமின்றி மூடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காசு மீதி (பழைய) ரூபா 47,233 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக ரீதியில் அவ்வாறான சொத்தொன்று சபையிடம் காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 99,183,339 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 89,048,114 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 098-01-002-3-3913965 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றில் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், தேறாத ரூபா 16,669 தொகையான 03 காசோலைகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் பேணப்படுகின்ற 04 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முறையே கூட்டுமொத்தமாக ரூபா 111,607,900 தொகையான மற்றும் ரூபா 318,072,018 தொகையான சேர்த்தல்கள் மற்றும் குறைத்தல்கள் பலவருட காலமாக தீர்க்கப்படாமல் காசேட்டில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 54,202,384 | 48,439,066 | 57,976,651 | 60,692,872 | 55,467,503 | 43,663,465 | 45,852,897 | 53,278,074 |
| வாடகை | 3,992,508 | 3,489,440 | 5,497,628 | 2,452,609 | 5,221,055 | 3,157,200 | 4,425,482 | 3,952,774 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | 566,110 | 566,110 | - | 242,715 | 666,060 | 357,710 | 551,065 |
| ஏனைய வருமானம் | - | 77,306,864 | 77,306,864 | - | - | 92,187,961 | 92,187,961 | - |

#### 2.3.2 வீதவரியும் வரியும்

(அ) ரூபா 50,000 ஐ விட கூடுதலாக நிலுவையாக இருந்த, தனியார் துறையின் 06 ஆதனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 63,350 ஆகும்.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசாங்கத்தின் 08 ஆதனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ஆதனவரி பெறுமதி ரூபா 130,610 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆதனங்களுக்குரிய நிலுவை ஆதனவரி அந்த ஆதனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 93,610 தொகையை விஞ்சியிருந்தது.

#### 2.3.3 வாடகை

(அ) சபைக்குரிய சந்தைத் தொகுதி மற்றும் 06 சந்தைகளின் 88 கடைகளிலிருந்தும் 28 பக்சி கடைகளிலிருந்தும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வாடகை மற்றும் தண்டப்பணக் கட்டணங்கள் முறையே ரூபா 2,293,799 மற்றும் ரூபா 2,567,197 ஆக

ரூபா 4,860,996 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதில் ரூபா 1,491,000 நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) கொட்டிகாவத்த புதிய சந்தையில் 03 கடைகளிலிருந்தும் பொதுச் சந்தையின் 10 பக்கி கடைகளிலிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது எந்தத் தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவைக் கடை வாடகை மற்றும் தண்டப்பணக் கட்டணம் என்பவற்றின் பெறுமதி ரூபா 656,095 ஆக இருந்தது. இவ்வாறு நீண்டகாலமாக கடை வாடகை நிலுவையாக இருந்த கடைகள் மற்றும் பக்கி கடைகள் என்பவற்றை சபை கையேற்று மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொத்தொட்டுவ பொது சந்தைத் தொகுதியில் 01 ஆம் இலக்க கடைக்காக 2017 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 46,675 தொகையான நிலுவை வாடகை மற்றும் ரூபா 12,025 தொகையான தண்டப்பணம் என்பவற்றை உள்ளடக்கியதாக கூட்டுமொத்தமாக ரூபா 58,700 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சகல கடைகளும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகையினைத் திருத்தி வாடகையாளருடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொட்டிகாவத்த பொதுச்சந்தையில் மேல்மாடி வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள 10 வீடுகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் தண்டப்பண கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 441,076 ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது நிலுவை வாடகை அறவிடல், அறவிட வேண்டிய மொத்த வாடகைப் பெறுமதியில் 25 சதவீதத்தை விட மிகவும் குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் 03 வீடுகளிலிருந்து எவ்வித நிலுவை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கொட்டிகாவத்த குறைந்த வாடகை வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள வாடகை வீடுகளிலிருந்து நடப்பாண்டில் எந்தவொரு நிலுவை வாடகையோ அல்லது நடப்பாண்டில் அறவிட வேண்டிய வாடகையோ அறவிடப்படாதிருந்த வீடுகள் 05 ஆகும். 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வீடுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை மற்றும் தண்டப்பண கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 291,065 ஆகக் காணப்பட்டது. 2018 மே 22 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய நிலுவை ரூபா 262,565 ஆகும்.

(எ) கொட்டிகாவத்த சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள 38 வீடுகளின் வாடகையை அறவிடுவதற்காக 1997 ஆம் ஆண்டின் போது அரசாங்க மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட மதிப்பீடு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அரசாங்க மதிப்பீட்டாளரால் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி புதிய வாடகை மதிப்பீடு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க வீடுகளின் வாடகை திருத்தஞ் செய்யப்பட்டு உரிய வாடகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு அதன்பிரகாரம் வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் 2015 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலத்திற்குரிய ரூபா 4,254,000 தொகையான வாடகை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஏ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஆதனமொன்று 2013 ஆம் ஆண்டின் போது சபைக்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் கிடைக்க வேண்டிய ரூபா 220,282 தொகையான வாடகைப்

பெறுமதி மற்றும் ரூபா 28,510 தொகையான தண்டப்பணக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 41,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 137,266,799 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கைவிடப்பட்ட இலக்குகள்**

(i) சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த 2017 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் கீழ் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 30 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சபையினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 56 வேலைகளின் உள்ளபடியான கிரயம் ரூபா 18.6 மில்லியனாக இருந்ததுடன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 8.3 மில்லியன் தொகையான 16 வேலைகள் நிதிஏற்பாடு இல்லாமையினால் கைவிடப்பட்டிருந்தது.

(ii) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டம் 2017 இன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,862,908 தொகையான 06 வேலை ஆரம்பிக்கப்படாமல் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| இலக்குகள் | வேலைகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 04 | 2,880,077 | பிரதேச வாசிகளின் எதிர்ப்பு |
| சூக்கித புறவற குடா அபிவிருத்தி செயற்திட்டம் முன்மொழிவு | 02 | 982,831 | பிரதேச வாசிகளின் எதிர்ப்பு மற்றும் செயற்திட்ட பெயர் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் |

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) 29.6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுடைய சபை அதிகாரப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள், 3.7 ஏக்கர் அளவிலான சதுப்பு நிலத்தில் கொண்டு குவிக்கப்பட்டு, உக்கும் கழிவுப் பொருட்களை பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இதன்போது கழிவுப்பொருட்கள் உரியவாறு தெரிவு செய்து போடுதல் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப்பொருள் முகாமைத்துவ விதிகளின் 6 ஆவது அத்தியாயத்தின் 59 ஆவது பந்தியின் பிரகாரம் சகல உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் பங்குபற்றலுடன் சேதன கழிவுப்பொருட்களுக்காக உயிரியல் வாயு, கூட்டுப்பசளையிடல் அல்லது ஏனைய பிரயோக தொழில்நுட்ப முறைமையொன்று ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் கூட்டுப்பசளைத் தளமொன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும், அது அதிகாரப்பிரதேசத்தில் ஒட்டுமொத்த உக்கும் கழிவுகள் கூட்டுப்பசளைக்காக போதியளவாகக் காணப்படாததுடன் கூட்டுப்பசளை தளத்தை விரிவுபடுத்துதல் அல்லது கழிவுகளை உபயோகித்து உயிரியல் வாயு உற்பத்தி செய்தல் அல்லது வேறு தொழில்நுட்ப முறைமைகளோ அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக்குவதற்காக பாடசாலை உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 திசெம்பர் இல் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 80,275 தொகையான 95 பாதணிச் சோடிகள் எதிர்பார்த்த விடயங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 17 மாத காலமாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது எஞ்சியிருக்க வேண்டிய 95 பாதணிச் சோடிகளில் சபையில் 86 பாதணிச் சோடிகள் மாத்திரமே காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 7,605 பெறுமதியான 09 பாதணிச் சோடிகள் தொலைந்து போயிருந்தன.

(ஆ) ஏழ்மையை ஒழிக்கும் நோக்கில் சுய தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு வழங்கப்பட்ட ‘‘பொப்கோன்’’ மெசின்களின் கிரயத்தை மேவுகை செய்வதற்காக இயந்திரம் வழங்கப்பட்டு 06 மாதங்களின் பின்னர் அடுத்து வரும் மாதத்திலிருந்து மாதாந்தம் 20 தவணைகளில் ரூபா 500 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 10,000 ஆன தொகையொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அந்த பணம் தொடர்ச்சியாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 66,000 பெறுமதியான 02 ‘‘பொப்கோன்’’ மெசின்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடம் / மிகை |
|---|---|---|---|
| பதவிநிலை | 03 | 03 | - |
| இரண்டாம் | 41 | 37 | 04 |
| ஆரம்ப | 216 | 190 | 26 |
| மொத்தம் | 260 | 230 | 30 |

(ஆ) நடப்பாண்டின் போது 04 உழியர்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 285,248 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது 06 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 534,112 தொகைகளை உள்ளடக்கிய கூட்டுமொத்தமான ரூபா 819,360 ஊழியர் கடன் தொகையில் மீளாய்வாண்டின் போது எவ்வித கடன் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் மீண்டெழும் மற்றும் மூலதன வருமானம் / செலவினத்தை, உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான அசாதாரண முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 89 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 84,110,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 39 செலவின விடயங்களுக்காக ரூபா 57,111,700 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 50 சதவீதத்தை விட விஞ்சி செலவிடப்படாத அளவு ரூபா 40,035,295 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டமை |
| | (ii) கணக்குகளில் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் சேகரித்தல் போதியளவில் இன்மை. |
| | | (ii) | புதிய வாடகை மதிப்பீடு அமுல்படுத்தப்படாமை |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | | பலவருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற தேறாத காசோலைகள், காசாக மாற்றி தீர்க்கப்படாமல் காணப்பட்டமை. |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | | இறுதியிருப்பு மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | | கைவிடல்கள் மற்றும் தாமதங்கள் காணப்பட்டமை |